# பதவி வெற்றிடம்

## தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு

(2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது)

## பணிப்பாளர் நாயகம்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் (CEO) பதவி

தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு பணிப்பாளர் நாயகம்/ பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் (CEO) பதவிக்கு 55 வயதிற்குட்பட்ட ஆட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி தலைமைத்துவப் பண்புகளுடனான திறமையினைக் கொண்டிருப்பதுடன், ஜனநாயக விழுமியங்கள் மற்றும் நல்லாட்சி இலட்சியங்களைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி அரசகரும மொழிகளுள் ஒன்று மற்றும் ஆங்கிலம் ஆகியவற்றில் அதிசிறந்த தொடர்பாடல் திறனைக் கொண்டிருத்தல் வேண்டும். இப் பதவி 2/2016(I) ஆம் இலக்க முகாமைத்தவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கைக்குட்பட்டு HM 1-1 ரூபா. 80,295 – 15 × 2,700 – 114,345 எனும் சம்பள அளவுத்திட்டத்தை உடையது. இப் பதவியானது ஆரம்பத்தில் 02 வருட காலப்பகுதிக்கு நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்த காலப்பகுதியைக் கொண்டிருப்பதுடன் மேலதிக நீடிப்பிற்கான கவனத்திற்கும் உட்பட்டது. இப் பதவி உத்தியோகபூர்வ வாகனங்கள் மற்றும் அரச துறையில் இப் பதவியினை ஒத்த பதவிகளுக்கு ஏற்புடையதைப் போன்ற கொடுப்பனவுகளுக்கும் உரித்துடையதாகும்.

**<u>தகைமைகள்</u>**

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பட்டம் அத்துடன் சட்ட அல்லது சமூக விஞ்ஞான பாடத்தில் பட்டப்பின் படிப்பு, அல்லது அதனை ஒத்த தொழில்சார் தகைமைகள் மற்றும் நிர்வாக மட்டத்தில் 05 வருட சிரேஸ்ட முகாமைத்துவ பதவி வகித்து 15 வருட அனுபவம்

அல்லது

II. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்ற பட்டத்துடன் கலாநிதிப் பட்டம் (Ph.D) மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவ பதவியில் 10 வருட அனுபவம் அதனை நிரூபிக்கும் ஆவணத்துடன்

அல்லது

III. சிரேஸ்ட நிலை சட்டத்தரணியாக 07 வருடங்களைக் கொண்டு பகிரங்கச் சட்டத்தில் சட்டத்தரணியாக பயிற்சி பெற்ற 15 வருட அனுபவம்

அல்லது

IV. தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவத்தினை நிரூபிக்கும் ஆவணங்களுடன், மற்றும் 9/2007 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் கவனத்திற்கொள்ளக்கூடிய மேற்குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகைமைகளை உடைய 65 வயதிற்குட்பட்ட அரச துறையிலிருந்து ஓய்வு பெற்றவர்

விண்ணப்பிக்கும் நடைமுறை

இருவரின் சான்றுப்படுத்தலுடன் தயாரிக்கப்பட்ட சுயவிபரக் கோவையை 2017.04.05 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்குமாறு தலைவர், தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழு, 203-204 கட்டடம் 2, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் (BMICH), பௌத்தலோக மாவத்தை, கொழும்பு- 07 எனும் முகவரிக்கு அல்லது rti.commission16@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். குறைந்தளவான விண்ணப்பதாரிகளே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.